# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1840/25 - 2013 දෙසැම්බර් මස 10 වැනි අඟහරුවාදා - 2013.12.10

1840/25 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

குறிப்பு இல.: வ/18/67/2003(2)-வத்/காசு/221

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை/ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் அல்லது ஆட்சி உரிமையின் விபரம்:-**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், றாகம்பத்துவை சிறு பிரிவில், உள்ள, 175- தெலங்கபாத கிராம சேவகர் பிரிவில் உள்ள தெலங்கபாத கிராமத்தில் அமைந்துள்ள, கம்பஹா நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல.: கம்.3904 இல் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0059 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய ஒரு (01) காணித் துண்டின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு:-

**துண்டு இல. 01;**

காணியின் பெயர்: கஹட்டகஹவத்தை; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஆர்.டீ.எஸ்.டீ.அமரசூரிய, ஆர்.டீ.டீ.என்.அமரசூரிய, ஆர்.டீ.டீ.ஐ.அமரசூரிய,இல.172, தெலங்கபாத வீதி, வத்தளை; விஸ்தீரணம்: 0.0059 ஹெக்டயார்.

மேற்குறித்த காணியை ஆட்சி/உரிமை எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை/ஆட்சி உரிமையை எடுத்தற்கான நட்ட ஈட்டுத் பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக (2 பிரதிகள்) எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சந்திமா திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை.
2013, திசெம்பர் 07.

12-1072

## பிழை திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*எனது இல.: அநு/21/5/2/3/55 –II වෙළුම*

*காணி,காணி அபிவிருத்தி அமைச்சின் இல.: எல்டீ* /05/2001/ஈ/353

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013, சனவரி 10 ஆம் திகதிய 1792/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில், ‘‘ஆரம்ப வரைபட இல. 920 இல் துண்டு இல. 1” என்பதற்குப் பதிலாக ‘‘இறுதிக் கிராம வரைபட இல. 920 இல் துண்டு இல. 424” எனப் பதிலீடு செய்யப்படுவதன் மூலம் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ஏ.எஸ்.பண்டார,
பிரதேச செயலாளர்,
கெக்கிறாவை .

பிரதேச செயலகம்,
கெக்கிறாவை.

12-1073